[2015 செப்டம்பர் 23

335—

வண்ண மீன் காட்சியகம்

***28547—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டையிலுள்ள அமராவதி அணைப் பகுதியில் வண்ண மீன் காட்சியகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி அணைப் பகுதியில் வண்ண மீன் காட்சியகம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் பிறப்பிடமே அம்மா! ஆற்றலின் சக்திதான் அம்மா! இனிமையின் இருப்பிடமே அம்மா! ஈகையின் பொருளே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையின் உரைகல் அம்மா! ஊக்கத்தின் உருவே அம்மா! எண்ணியதை முடிக்கும் அம்மா! ஏற்றத்தின் தோற்றம் அம்மா! ஐயத்தை ஒழித்தாய் அம்மா! ஒற்றுமையை வளர்த்தாய் அம்மா! ஓங்கார நாயகியே அம்மா! ஔவையின் தமிழ்கோல் அம்மா! தமிழின் உயிரெழுத்து அம்மா! தமிழ்நாட்டின் உயிரே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அமராவதி அணைப் பகுதியில்

2015 செப்டம்பர் 23]

வண்ண மீன் காட்சியகம் அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லையென்று கூறினார்கள். அங்கே வண்ண மீன் காட்சியகம் அமைப்பதற்குத் தேவையான வசதிகள் இருக்கின்றன. அங்கு மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. வண்ண மீன் காட்சியகம் அமைப்பதற்கு, தேசிய மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் ரூ.1 கோடி நிதி கோரி அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அங்கு 19 நர்சரி தொட்டிகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. மீன் பண்ணைக்குத் தேவையான அரை ஏக்கர் நிலமும் அங்கே இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அமராவதி அணைப் பகுதியில் வண்ண மீன் காட்சியகம் அமைப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—15

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் அமராவதி மற்றும் திருமூர்த்தி ஆகிய இரு நீர்த்தேக்கங்கள் உள்ளன. ஏற்கெனவே 2014 ஆம் ஆண்டு திருமூர்த்தி நீர்த்தேக்கத்தில், சுமார் 2,000 சதுர அடி பரப்பளவில், வண்ண மீன் காட்சியகம் அமைக்கப்பட்டு, 25 மீன் தொட்டிகள் வைக்கப்பட்டு, அவற்றில் 25 வகையான வண்ண மீன்கள் விடப்பட்டு, பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், திருமூர்த்தி நகரமானது, பிரசித்தி பெற்ற கோவில் திருத்தலமாகவும், சுற்றுலாத் தலமாகவும் உள்ளது. திருமூர்த்தி அணையில் உள்ள வண்ண மீன் காட்சியகம் நல்லமுறையில் இயங்கி வருகிறது. இக்காட்சியகத்தை வருடந்தோறும் சுமார் 20,000 பார்வையாளர்கள் பார்வையிடுகின்றனர். திருமூர்த்தியிலிருந்து அமராவதி அணை 12 கிலோ மீட்டர் தொலைவில்தான் உள்ளது. இந்நீர்த்தேக்கத்தில் வருடத்தில் 8 மாதங்கள் குறைந்த அளவு தண்ணீரே இருக்கிறது. அதாவது, நான்கு மாதங்களுக்கு மட்டுமே தண்ணீர் இருக்கிறது. எனவே, வண்ண மீன் காட்சியகம் அமைக்கத் தேவையான நீரை வருடந்தோறும் அணையிலிருந்து

எடுக்க இயலாத நிலை உள்ளது. மேலும், அணையினைப் பார்வையிடும் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக உள்ளது. எனவே, அமராவதி அணைப் பகுதியில் வண்ண மீன் காட்சியகம் அமைக்க சாத்தியக்கூறுகள் குறைவாக இருப்பதால், இங்கு வண்ண மீன் காட்சியகம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 336, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

336—

நுழைவுக் கட்டணம்

***7632—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்துத் திரையரங்குகளிலும் அரசு நிர்ணயித்த நுழைவுக் கட்டணத்தை காட்சிக்கு வைக்கவும், அக்கட்டணத்தை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் அரசு அனுமதித்த கட்டணத்தை வசூலிப்பது தொடர்பாக விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. விளம்பரப் பலகைகள் வைக்கப்படாத திரையரங்குகளில் உடனடியாக விளம்பரப் பலகையை வைக்க நடவடிக்கை எடுக்கவும், அரசு நிர்ணயித்த கட்டணத்தை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, மாநகர காவல் ஆணையாளருக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது